**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.389/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | கண்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of September 2021.

நான் உறுமன்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். வழக்கின் எதிரிகளை தெரியும். தேதி, மாதம் ஞாபகமில்லை2009 ம் ஆண்டு P.T பஸ்ஸில் மூலைக்கரைப்பட்டியில் இருந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 யிடம் (முருகன், மற்றொரு நபர் பெயர் தெரியவில்லை ஆள் தெரியும். எதிரி ஆஜர் இல்லை). எதரிகள் இருவரும் இடம் பிரச்சனை சம்பந்தமாக சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் 2.15 மணியளவில் தான் வந்தேன் சண்டை போட்டு கொண்டிருந்தனர். முருகனுக்கு காயம் இருந்தது. அ.சா.1 க்கும் உடல் முழுவதும் ரத்த காயம் இருந்தது. அ.சா.1 யை நான் காவல்நிலையம் அழைத்து சென்றேன். அவர் புகார் கொடுத்தார். அதன்பிறகு அவர்கள் TVMCH மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். சுப்பையா கிளினிக்கில் நான் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டேன். நான் பார்த்ததில் அ.சா.1 க்கு இடது கால் மூட்டு, இடது முழங்கை மற்றும் முகம் முழுவதும் ரத்த காயத்துடன் இருந்தார். சம்பவ இடத்தில் இருதரப்பினரின் வண்டியும் கிடந்தது. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள். விசாரணையின் போது போலிசாரிடமும் இவ்வாறு தான் கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திற்கு நீங்கள் வரும் போது சம்பவம் முடிந்துவிட்டது என்றால் சரிதான். அ.சா.1 க்கு காயம் எப்படி ஏற்பட்டது என்று அவர்கள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 வண்டியில் இருந்து கீழே விழுந்து தான் காயம் ஏற்பட்டது என்றால் எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு உங்களுடன் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் அழைத்து சென்றேன். நீங்கள் மருத்துவமனைக்கு எதில் சென்றீர்கள்

என்றால் Omni வேன் வர சொல்லி அதில் சென்றேன். சுப்பிரமணியன் உங்கள் அண்ணன் மகன் என்றால் சரிதான். உங்கள் அண்ணன் மகனுக்கு ஆதரவாக சம்பவ இடத்திற்கு வராமல் பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**